Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 6
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 4 ஞாயிறு 5 [16-2-67] வியாழக்கிழமை

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
நப்பர் வளையல் முதலியவற்றிற்கு
நவீன முத்துமாலை
முடிமயிர் வகைகளுக்கும்
ஜீவரா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஸ்தாபகர்: வீதி, யாழ்ப்பாணம்.

யாருக்கு வெற்றி எனச் சொல்ல முடியாத நிலை

நகரில் தி. மு. க. வினர் வெற்றி வாய்ப்பு

—நமது நிருபர் கா. யோகநாதன்—

சென்னை, பெப்ரவரி 15

தமிழ்நாட்டில் இன்று வாக்களிப்பு நடைபெற்ற பல தொகுதிகளிலும் காணப்பட்ட ஆர்வமும் உற்சாகமும் இத்தேர்தலில் எந்தக்கட்சி பெருமபான்மைப் பலத்துடன் வெற்றியீட்டி ஆட்சிபீடத்துக்கு வரும் என்று சொல்ல முடியாதிருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சட்டசபைத் தொகுதிகளில் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன், திரு. கே. ஏ. மதியழகன், திரு. ம. பொ. சிவஞானம், திரு. மு. கருணாநிதி ஆயோரின வெற்றியும் பார்லிமெண்ட் தொகுதியில் திரு. சி. என். அண்ணாதுரையின வெற்றியும் நிச்சயம் எனறே கருதக்கூடியதாக இருக்கிறது.

படித்தவர்களும் உத்தியோகம் பார்ப்பவர்களும் அதிகமாக வாழும் பகுதியான தியாகராய நகரில் வாக்களிப்பு மிகச் சுறுசுறுப்பாக இருந்தது. இதர இடங்களில் சுறுசுறுப்பும் உற்சாகமும் கூட்டணியினர் பக்கமே வெளிப்படையாகத் தோற்றினாலும் காங்கிரஸ் ஆதரவாளரும் சோம்பியிருக்கவில்லை.

ஆட்சிக்குவந்த மறுநாளே அரிசி விலையைக் குறைப்போம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கடைசி நேரத்தில் செய்த பிரசாரம் வாக்காளர் மத்தியில் சிறிது மனமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே தோன்றுகிறது.

தி. மு. க. தலைவர்கள் திரு. சி. என். அண்ணாதுரை திரு. மு. கருணாநிதி, திரு. இரா. நெடுஞ்செழியன், திரு. மதியழகன் ஆகியோர் சென்னை நகரில் இன்று வாக்களிப்பு நிலையங்கள் பலவற்றுக்கும் சென்றுபார்வையிட்டு வந்தனர்.

நகரில் சில இளங்களில் சிறு சிறு சம்பவங்கள் நடைபெற்றுள்ள போதிலும் பொதுவாக இன்று பிற்பகல் வரை எங்கும் அமைதியான முறையிலேயே வாக்களிப்பு நடைபெற்றது

வவனியாவில்

14 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கை ஆரம்பம்

100வாலிபர்கள் குடியேற்றப்பட்டனர்

வவனியா, வெள்ளி

வவனியாவில் அரசாங்கத்தால் உணவு உற்பத்திக்கென தெரிவுசெய்யப்பட்ட 14 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முதலில் குடியேற்றப்படுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட 100 வாலிபர்கள் இப்போது குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்தவைபவத்தின்போது வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரேரா, மாவட்ட விவசாய அதிகாரி திரு. பி. மாணிக்கவாசகர், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. மு. பஞ்சலிங்கம் கூட்டுறவு ஆணையாளர் விஜயரத்தினம் உட்பட பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வாலிபர்களைக் குடியமர்த்தும் இவ்வைபவத்தின் போது விவசாய அதிபர் திரு. பி. மாணிக்கவாசகர் கூறியதாவது:-

'இலங்கையின் எதிர்காலம் வாலிபர்களாகிய உங்கள்கையில்தான் தங்கியிருக்கிறது. இலங்கையின் உணவுப்பிரச்னையைத் தீர்ப்பதில் நீங்கள்முன்னின்று உழைக்க வந்துள்ளது மிக்க மகிழ்ச்சிகரமானதொன்றாகும். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலத்திலிருந்து முழுப்பயனையும்பெறநீங்கள் முழுவலிமையுடன் உழைக்கவேண்டும்.''

வவனியா காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். பஞ்சலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

நீங்கள் உங்களுக்குத்தரப்பட்டுள்ள குடிசைகளில் நிரந்தரமாகக் குடியிருந்து உணவுஉற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

வவனியா கூட்டுறவுஉதவி ஆணையாளர் திரு. விஜயரத்தினம்பேசுகையில் இப்பகுதியில் மிகவிரைவில் கூட்டுறவச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைத்து, அதன்கீழ் இப்பகுதியில்குடியேறியுள்ளவர்களுக்குகடன் உதவிவசதிகள் அளிக்க நான் எப்பொழுதும் முன்நிற்பேன்என்றார்.

வவனியாஅரசாங்க அதிபர் பேசுகையில் இத்திட்டம்வெற்றி பெற தம்மாலான உதவிபுரியதாம்முன்னிற்பதாகத் தெரிவித்தார்.

துணுக்காய்-மாங்குளம் வீதி விரைவில் திருத்தப்படும்

கி. ச. கட்டடத் திறப்புவிழாவில் அரசாங்க அதிபர்

துணுக்காய், புதன்

"நீங்கள் வீதிகளைத் திருத்தி அமைத்துத் தாருங்கள். நாங்கள் எங்கள் பகுதியிலிருந்து அதிக உணவுப் பொருள்களை உங்களுக்குத் தருகின்றோம்.'' என்று துணுக்காய் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் சங்கக் காரியதரிசி- திரு. க. சந்திரசேகரம் யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா விடம் சமர்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

துணுக்காய் கிராம முன்னேற்றச்சங்கக் கட்டிடத்தை திரு. வேர்ணண் அபயசேகரா திறந்து வைத்தார். யாழ். மாவட்டகாணிஅதிபர் திரு. எஸ். சிவஞானம் "பாற்மின்டன் மைதானத்தை'' திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமொன்று துணுக்காய் காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம்தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் கூறியதாவது - "அரசாங்கம் பொது மக்களுக்கு இலவசமாக அரிசி, கல்வி வசதிகள் வைத்தியம் ஆகியவற்றை கொடுக்கிறது. ஆனாலும் இப்பகுதி மக்களின் முக்கிய பிரச்னை "வீதிகள்'' என்பதை நான் உணருகிறேன். நான் விரைவில் சம்பந்தப்பட்டவர்களோடுதொடர்புகொண்டு முக்கிய வீதியாகிய துணுக்காய் - மாங்குளம் வீதியை தார்இட்டுத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்''

திருவாளர்கள் க. சோமசுந்தரம், வ. வேலுப்பிள்ளை, சா. தம்பு, சே. தில்லைநாதன், எஸ். சரவணமுத்து எஸ். சிவஞானம் உட்பட பலர் பேசினார்கள்.

முல்லைத்தீவு கண்ணன் மரணம்

காணமற்போன தினம் கண்ணன் 6 பேருடன் வெளியே சென்றான்

பொலிஸ் இரகசிய விசாரணையில் மேலும் புதிய தகவல்கள்

யாழ்ப்பாணம், வியா.

முல்லைத்தீவில் அண்மையில் காணமற்போய் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட நிலையில்கண்டெடுக்கப்பட்ட 10வயதுச் சிறுவனான கண்ணனின் மரணம் சம்பந்தமாக இரகசியப்பொலிஸார் மேலும் புலன் விசாரணை செய்வதில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

கண்ணனின் சடலத்தைப் பரிசோதனைசெய்த கொழும்பு வைத்திய அதிகாரி கண்ணனின் தலையில்நான்கு பலமான அடிகாயங்கள் இருந்ததாகத் தெரிவித்ததைத்தொடர்ந்து கண்ணன் புதைக்கப்பட்டிருந்த குழியில் இருந்த மண்ணும்வைத்தியபரிசோதனைக்காகயாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தினூல் கொழும்பிற்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டது.

மரணமான கண்ணன் காணமற்போன தினத்தன்று ஆறு நபர்களுடன் வீட்டிலிருந்து வெளியே சென்றதாகவும், தென்னை வளவொன்றில் இளநீர் பிடுங்குவதற்காகவே இவர்கள் சென்றதாகவும், பொலிஸார் நடத்திவரும் இரகசிய விசாரணையில் தெரிய வந்தது. இளநீர் பிடுங்கியபோதே கீழே நின்றுகொண்டிருந்த கண்ணனின் தலையில் காயங்கள் ஏற்பட்டிருக்கவேண்டுமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டஆறு நபர்களையும் கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதுபற்றி இரகசியமாகத் துப்புத்துலக்க இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன் தலைமையில் இரகசியப் பொலிஸாரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டியினர் [illegible] கடந்த ஒரு வாரகாலமாக முல்லைத்தீவில் விசாரணை நடத்தி வருகின்றனர். காலஞ் சென்ற கண்ணனின்தந்தையுடன் காணி சம்பந்தமான தகராறொன்றில் சம்பந்தப்பட்ட துரையப்பா என்பவரும் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். புலன்விசாரணைதொட [illegible]

கிராம சேவகருக்கு தகநாயக்கா எச்சரிக்கை

கொழும்பு, புதன்

நாசவேலைகளில் ஈடுபடும் கிராமசேவகர்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் உடனடியான தண்டனை வழங்கப்படவேண்டுமென்று உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யூ. தஹநாயகா கூறியுள்ளார். இங்கு நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் இன்று டாக்டர் தஹநாயகா பேசுகையில், நாசவேலைகளில் சம்பந்தப்பட்ட கிராமசேவகர்களையும் பொலிஸ் அதிகாரிகளையும் உடனடியாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இந்தப்பொறுப்பு அர

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனிதன் கவலைக்கடலை நீந்திச் சுகத்தை அடைவதற்கு வழி என்ன என்று சிந்தித்த படி அலைகின்றான். காலந்தோறும் சுகத்துக்கு வழி கண்டு பிடிக்கப்படுகின்றது. அந்த வழி தானே சமயமாய் விடுகின்றது. —பண்டிதமணி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA
Telegram: EELANADU Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மாசி 4 [16-2-67]

உணவுப் பொருள் விநியோகம்

அரிசி, மா, மற்றும் உபஉணவுப் பொருள்கள் பல கொழும்புத் துறை முகத்தில் இப்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்றன. இச் செய்தி பலருக்கும் உள்ளம் குளிரச் செய்யும். உணவுப் பொருள் இறக்குமதியால் மட்டும் போதாது. அவை சரியான முறையில் விநியோகம் செய்யப்பட வேண்டியது அவசியம்.

அரிசி நெருக்கடி ஏற்பட்டு பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்பட்ட போதும், உபஉணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட போதும் இருக்கும் பொருள்களை சரியான முறையில் பங்கீடுசெய்திருந்தால், மக்கள் இன்று போல் சொல்லொணாக் கஷ்டம் அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட இடமிருந்திருக்காது.

'கையிருப்பிலுள்ள உணவுப் பொருட்களையும் இறக்குமதியாக விருக்கும் உணவுப் பொருட்களையும் கணித்துப் பார்த்தால், உப உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் இதற்கு விநியோக முறை சீராக இருக்க வேண்டியது அவசியம்' என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் கூறியிருப்பது உபஉணவுப்பொருள் தட்டுப்பாட்டுக்கான உண்மைக் காரணத்தை அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளதென்பதைக் காட்டுகிறது. உணவுப் பொருள் விநியோக முறையிலுள்ள குறைகளை நீக்கி நாடு முழுவதிலும் சீரான முறையில் விநியோகம் நடைபெறுவதைக் கவனிக்க வேண்டுமென்றும் விநியோகம் சம்பந்தமாக பொதுமக்கள் தெரிவித்துள்ள குறைகளில் உண்மை இருப்பதாகவும் இதில் அரசாங்க அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அமைச்சர் ஜயவர்த்தனு கூறியிருக்கிறார். பலநோக்கசங்க சமாஜம் ஒவ்வொன்றுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கொடுக்கும் உணவுப் பொருள்களின் அளவு விபரம் வாராவாரம் அரசாங்க அதிபர்களுக்குத் தெரிவிக்கப்படுமென்றும் அந்த உணவுப் பொருள் யாவும் சமாஜத்துக்கு ஒழுங்காக வந்து சேருகிறதாவென்பதையும் அவை சரியாக விநியோகிக்கப்படுகிறதாவென்பதையும் அரசாங்க அதிபர்கள் கவனித்துக் கொள்வதன் மூலம் உணவுப் பொருள் விநியோக ஒழுங்கீனங்கள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்றும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்திருப்பது நல்ல ஏற்பாடாகவே தோன்றுகிறது. கூ. மொ. வி. கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் மிருந்தாலும் உணவுப் பொருள்களையும் மற்றும் பொருள்களையும் கொள்முதல் செய்வதற்காக கொழும்புக்கே பல நோக்கச் சங்க சமாஜ அதிகாரிகள் செல்கின்றனர். தரமுள்ள, நல்ல பொருள்களைத் தெரிவு செய்யும் பொருட்டே அவர்கள் கொழும்புக்குச் செல்கின்றனராம். இதில் உண்மையில்லாமலில்லை. ஆனால் கொழும்பிற்குச் சென்று கூ. மொ. வி. தலைமை ஸ்தாபனத்தில் கொள்முதல் செய்யப்படும் தரமான, நல்ல பொருள்கள் சில சமயங்களில் கொழும்பில் புறக்கோட்டைப் பகுதிக்கே போய்ச் சேர்ந்து விடுவதாகப் புகார் கூறப்படுவதுண்டு. இதிலும் உண்மை இல்லை என்று கூறிவிட முடியாது. மக்களின் நன்மையையே கருதும் பலநோக்கச்சங்க சமாஜங்களும் நேர்மையுள்ளம்கொண்ட சமாஜ ஊழியர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் சிலரின் தவறுன, ஒழுங்கற்ற செயல் பலரின் அதிருப்தியைத் தேடிக் கொடுத்து விடுகிறது.

வீண் புகார்களையும், மக்கள் அனாவசியமான கஷ்டங்களுக்குள்ளாவதையும் தவிர்த்துக்கொள்வதற்கு, பலநோக்க சமாஜங்கள் ஒவ்வொன்றுக்கும் கூ. மொ. வி. ஸ்தாபனம் வாராவாரம் வழங்கும் பொருள்களின் நிறை அளவுபற்றிய விபரங்கள் அரசாங்க அதிபர்களுக்குத் தெரிவிக்கப்படுவது நல்லதுதான். அரசாங்க அதிபர்கள் டிரர்ச் சோதனைமூலம் ஊழல் நடைபெறுமல் தடுக்கவும் உணவுப்பொருள்கள் சரியானமுறையில் பங்கீடு செய்யப்படுவதையும் கவனித்துக்கொள்ள முடியும். இதேசமயம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கச் சமாஜங்கள், தங்கள் அங்கத்துவக் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும் வாராவாரம் விநியோகிக்கும் உணவுப்பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் பற்றியும் அவைகளின் நிறை, அளவு பற்றியும் பொதுமக்களுக்கும் தெரியப் படுத்துவது பயனளிக்கலாம். 500 கூப்பன்களுள்ள சங்கக் கடைகளுக்கு இத்தனை முத்தல் மல்லி வழங்கப் பட்டிருக்கிறதென்பதை சமாஜம் அந்த வாரத்தில் தெரிவித்தால் பொது மக்கள் குறிப்பாக அந்தக் கடையில் கூப்பன் அரிசி வாங்கும் மக்கள் தங்களுக்கு எத்தனை அவுன்ஸ் மல்லி கிடைக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியும். சங்கக்கடைகளுக்கும் உத்தரவுபெற்ற வியாபாரிகளுக்கும் வாராவாரம் வழங்கப்படும் பொருள்கள் அளவு பற்றிப் பத்திரிகைகள் மூலம் அல்லது அறிவித்தல் மூலம் தெரியப்படுத்துவதனால் சமாஜங்களுக்கு [illegible]

ஐயாறன் எழுதுவது

திருநாவுக்கரசு நாயனாருக்கு கைலாசக் காட்சி அளித்தது திருவையாற்றிலே ஆடி அமாவாசையன்று. அப்போதுதான் ''மாதர் பிறைக் கண்ணியானை....'' என்ற புகழ் பெற்ற பதிகத்தையும் அவர் பாடியது. அந்த சமயத்திலே மூன்றுநாட்களுக்கு விசேஷ விழாவை நடத்தி, கருத்தரங்கு, தேவாரக் கச்சேரிகள், அன்னதானம், நாடகம், இவற்றை நடத்துவதுடன் இலங்கை, மலாயா, தென்னபிரிக்கா, பர்மா முதலிய நாடுகளில் இருந்து சைவ ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை வரவழைத்தும், சைவ மடாதிபதிகளை வரவேற்றும், சர்வதேச அடிப்படையில் நடத்தவேண்டுமென்றும், ஸ்ரீ தியாகராஜ உற்சவ காரியதரிசிகளுள் ஒருவரான ஸ்ரீ செல்லமையர் என்பவர் ஆர்வத்துடன் தெரிவித்தார்.

இதற்கு விரிவான ஒரு திட்டத்தையும் தயாரித்துக் கொடுத்ததுடன், இவ்வித விழாவை திருவையாற்றில் நடத்தி, ஆகாசவாணியில் மூன்று நாட்களும் அஞ்சல் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்வது பெரும் பயனளிக்குமென்றும்சொன்னார். ஸ்ரீ தியாகராஜரின் கீர்த்தனைகளெல்லாம் தெலுங்கில்தான். அப்பாடல்களுக்கு அங்கு கூடும் மக்களில் பெரும்பாலோருக்கு கருத்து விளங்காது. ஆனால் அப்பர் சுவாமிகளின் தேவார திருத்தாண்டகங்களெல்லாம் எளிய தமிழில் உள்ளனவாகையால் தமிழருக்குப் புரிந்து மிகவும் பயன் அளிப்பதாக இருக்கும்

இந்த நல்ல யோசனையை ''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை'' முதல்தலைவரும், திருவையாறுகோவில் ஆதீன அதிபருமான தருபுரம் 25-வது குருமார் சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடமும், மதுரை ஆதீன பீடாதிபதியிடமும் தெரிவித்தேன். இந்த யோசனையை அவர்கள் ஆதரித்து இதற்கான ஏற்பாடுகள் செய்யலாமென்றும் தெரிவித்தது மகிழ்ச்சியளித்தது.

''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை'' சமீபத்தில் அமைக்கப்பட்டதைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். தமிழகத்திலுள்ள தருமபுரம், திருவாடுதுறை, திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி முதலிய சைவ ஆதீனங்களும், காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காரச்சாரி சுவாமிகள் முதலியவர்களும் இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர். சரித்திரத்திலேயே, இவ்வளவெல்லாரும் சேர்ந்து கூடிப் பேசமுடிவது இதுதான் முதல் தடவை! ''தென்னாட்டின் திருமடங்களும், திருக்கோவில்களும் இணைந்து உருவாக்கிய ஓர் அமைப்பே இது. இந்துசமய மக்கள் தங்கள் சமயத்தின் பெருமையை உணர்ந்துகொள்ளவும் இந்து மதத்தில் தங்களுக்குள்ள நம்பிக்கையை வலிமைப்படுத்திக் கொள்ளவும், இந்து தருமத்துக்கும் ஒழுக்கப் பண்பாட்டுக்கும் ஏற்றபடி இந்துசமய முறையில் வாழ்க்கை நடத்தத்துணைசெய்யவும் உரிமை முறையில் சமயப்பணிகள் இயற்றுவதை நோக்கமாகக் கொண்டு, இப் பேரவை அமைக்கப்பெற்றுள்ளது.''

கோவில்களும், திருமடங்களும் தங்கள் வருவாயிலே ஒரு பங்கை இப் பேரவைக்குச் செலுத்துகின்றன. இதன்மூலம் வருடத்திலே சுமார் 5 லட்ச ரூபாய்க்கு மேல் கிடைக்கிறதென்றும், இப் பணத்தைக்கொண்டு, இந்துசமயப் பிரசாரத்தை தீவிரமாகச் செய்ய உத்தேசித்துள்ளதாகவும் அறிந்தேன். பலமடாதிபதிகளும் இவ் விஷயமாக ஒத்துழைப்பதன் மூலம் தமிழத்திலே இனி இந்துசமூகத்தில் தெய்வீக வாழ்க்கை பலப்பட உதவியாக இருக்கலாம். இவ்வருடம்தான் இச்சபை இயங்க ஆரம்பித்துள்ளது.

இதுவரை இந்தியாவிலே பள்ளிக்கூடங்களில் மாணவ மாணவிகளுக்கு சமயபாடம் கற்பிக்கப்படுவதில்லை. இந்தியா ''செக்யூலர் ஸ்டேட்'' [மதச்சார்பற்ற அரசாங்கம்] ஆகவே பள்ளிக்கூடங்களிலே மதபோதனையைச் சேர்க்கவில்லை என்று தெரிவித்தனர். அதாவது மதபோதனையே பகிஷ்கரிக்கப்படுகிறது. இலங்கையிலே அந்தந்த சமய மாணவர்களுக்கு சமயபோதனை கட்டாயமாக ஒருபாடமாக போதிக்கப்படுவதாயும், அதில் பரீட்சைகள் வைப்பதாகவும் தெரிவித்தபோது அங்கு பலருக்கும் அதுவியப்பாக இருந்தது. இந்தியாவில் மாணவர்களிடையே அதிகளர்ச்சிகளும், நாத்திகவாதமும் தலைதூக்கி இருப்பதற்கு மதக்கல்வி அளிக்கப்படாததே காரணமென்று உணர்ந்து அவர்களுக்கு அதை மெதுவாக அளிக்க இப்போது யோசனை இருந்துவருகிறதாம். அதற்கு முதற்படியாக, இங்கு கொழும்பிலே விவேகானந்த சபையார் சமயபாடப் பரீட்சை நடத்தும் முறைகளையும், அதற்கான பாடப் புத்தகங்களையும் பார்த்து, அவ்விதமே தமிழகத்திலும் நடத்த மதுரை ஆதீனம் உத்தேசித்து சைவசமய பாடபுத்தகங்களைப் பார்க்க வேண்டுமென்று எழுதிக் கேட்டிருந்தார்.

இதைத் தெரிவித்ததும் யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா, கலைவாணி, சுன்னகம் தனலக்குமி உள்ளிட்டுப் பல அன்பர்களும் உடன் மகிழ்ச்சியுடனே பலபாடப் புத்தகங்களையும் அனுப்பி வைத்தார்கள். இதையெல்லாம் மதுரை ஆதீனகர்த்தர் நன்றியுடன் ஏற்று, தமிழகத்திலும் மாணவ மாணவிகளுக்கு சமயபாடப் பரீட்சை நடத்த விரும்புவதாகத் தெரிவித்தார்கள். இவ்விஷயத்திலேயும் தமிழகத்துக்கு ஈழம் வழிகாட்டியாக இருப்பதைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

* * *

வாளா நின்று தொழும் அடியார்கள், வாளைப் பெறும் வார்த்தையைக் கேட்டும், நாணுளும் மலரிட்டு வணங்கார், நம்மையாள்கின்ற தன்மையை ஓரார், கேளாநான்கிடந்தே உழைக்கின்றேன், கிளைக் கெலாந் துணையாமெனக் கருதி, ஆளாவான் பலர் முன் பழைக்கின்றேன், ஆரூராளை மறக்கலுமாமே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[யாதும் வருந்தாமலே நின்று வணங்குகின்ற அவன் அடியார்கள் வானுலகத்தை ஆளுதலாகிய பெருஞ் செல்வத்தைப் பெற்று விடுகின்ற செய்தியைக் கேட்ட பின்பும் சிலர் அவனை நாள் தோறும் மலர் தூவிவணங்குகின்றிலர். அங்ஙனம் வணங்குகின்ற நம்மை அவன் இம்மையிலேயே நன்குபுரத்தலை யும் அறிகின்றிலர். ஆயினும் யான், எனக்கேயன்றி என் கிளைகளுக்கும் அவன் துணையாவான் என்று கருதி, அவனையே உறவாகக் கொண்டு, அவனுக்குப் பணி புரிந்து நிற்கின்றேன். அன்றியும் பலரையும் அவனுக்கு ஆளாகுமாறு நின்று அழைக்கின்றேன். ஆதலின் யான் அவனை மறத்தலும் இயலுமோ.]

ஜெர்மன் திரைப்பட விழா

யாழ்ப்பாணம், வியா. சினிமா சிக்ஸ்டீன் சங்கத்தினதும் பிரதேச கலைமன்றத்தினதும் ஆதரவில் ஜெர்மன் திரைப்படவிழா இன்று முதல் 18-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்ட 'தலயர்', 'ஓமை பாப்பா', 'ட்ரீமிங் லிப்ஸ்', 'எல்ஹக்கீம்' ஆகிய நான்கு ஜெர்மன் திரைப்படங்களும் இவ்விழாவில் இடம்பெறும்.

திரைப்பட விழா யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் நடைபெறும்.

சங்கானை

வரியிறுப்பாளர் சங்கத் தீர்மானம்

சங்கானை, புதன்

சங்கானை வரியிறுப்பாளர் சங்கக் கூட்டம் வெல்வில் முருகமூர்த்தி கோவில் முன்றலில் திரு. நா. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அவ்வப்பகுதி மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சங்கானையில் நல்ல இடத்தில் அமைந்திருக்கும் அரசினர் மரக்காலை இடம் பெயர்வதற்கான திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும். இம்மரக்காலை இடம்பெயர்வதால் பாவனையாளர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென ஊக்கமளிக்கும் இவ்வேளையில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையை நீக்கக் கடும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அதிருப்தி

சங்கானை, புதன்

வனபரிபாலன இலாகாவில் பெரிய மரங்கள் எடுப்பதற்கு விண்ணப்பித்திருந்தவர்களை சங்கானை அரசினர் மரக்காலைக்கு மரம் பெற்றுக்கொள்ளவரும்படி உத்தியோகத்தர்கள் அறிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து விண்ணப்பதாரர்கள் சென்ற 6-ம்திகதி சங்கானை மரக்காலையில் வந்து காத்து நின்று உத்தியோகத்தர்கள் வராததால் ஏமாற்றத்துடன் வீடுதிரும்ப வேண்டியநிலை ஏற்பட்டதாம். இதனால் மரம்பெறச் சென்றவர்கள் பெருத்த அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

இன்னமும் கிடைக்கவில்லை

யாழ்ப்பணம், வியாழன்

1963-ம்வருடத்தில்ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெற்று சித்தியடைந்து வெளியேறிய ஆசிரியர்களின் தராதரப் பத்திரங்கள் இன்னமும் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லையென அறியப்படுகிறது.

இதனால் மூன்றுண்டுகளின் பின் முதலாம் தரத்துக்கு உயர்த்தப்படவேண்டிய ஆசிரியர்கள் முதலாம்தர உயர்வையோ அதற்குரிய சம்பள உயர்வையோபெற முடியாதிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு ராஜ்யங்களில் நடைபெற்ற தேர்தல்: 5 கோடி 75 லட்சம் பேர் வாக்களிப்பு

69 லோகசபை, 752 சட்டசபை ஸ்தானங்களுக்குதேர்தல்நடந்தது

தமிழ்நாட்டில் வாக்களிப்பில் சுறுசுறுப்பு:

புதுடில்லி, பெப். 15

இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தல் இன்று ஆரம்பமானது. எட்டு ராஜ்யங்களிலும் மத்திய அரசாங்க நிர்வாகப் பொறுப்பிலுள்ள மணிப்பூரிலும் இன்று தேர்தல்கள் நடைபெற்றன. வாக்களிப்பு சுமுகமாக ஆரம்பித்ததாக இன்று காலையில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இன்று காலை எட்டு மணிக்கு, ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, பீஹார், குஜராத், மகராஷ்டிரா, மைசூர், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய எட்டு ராஜ்யங்களிலும் மத்திய அரசாங்க நிர்வாகப் பொறுப்பிலுள்ள மணிப்பூரிலும் வாக்களிப்பு ஆரம்பமானது.

தமிழ்நாட்டில் நீண்ட கியூ

இன்று காலையில் தமிழ்நாட்டில் வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றது. மற்றைய ராஜ்யங்களிலும் பார்க்க தமிழ்நாட்டில்தான் நீண்ட 'கியூ' காணப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன. தமிழ்நாட்டில் இன்று காலையில் ஆறு மணியிலிருந்து [வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு இரண்டு மணிநேரம் முன்னதாக] வாக்களிப்பதற்காக மக்கள் நீண்ட 'கியூ'வில் காத்துநின்றனர். அதிகமானவர்கள் காலையில் ஐந்து மணிக்கே வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்னர் கூடத் தொடங்கி விட்டனர். இவர்களில் பெண்கள் கூடுதலாகக் காணப்பட்டனர்.

தமிழ்நாட்டின் முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் மக்கள் மிகவும் உற்சாகத்துடன் சென்று வாக்களித்தனர் என்றும் அதிகமானவர்கள் தங்கள் வாக்குகளைக் காலையிலேயே அளிப்பதில் முன்னின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை என்று பொலிஸ் அறிவிப்பொன்று கூறியது.

முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள்

தமிழ்நாட்டில் மட்டுமன்றி மற்றைய ராஜ்யங்களிலும் இன்று முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாட்டில் இன்று திருவாளர்கள் கு. காமராஜர், சி. என். அண்ணாதுரை, எம். பக்தவத்சலம், எம். கருணாநிதி, எஸ். சுப்பிரமணியம், எம். ஜி. ராமச்சந்திரன், ம. பொ. சி. ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. ஆந்திர பிரதேசத்தில் 110 ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளிலும் 18 லோக சபைத் தொகுதிகளிலும் தேர்தல்கள் நடைபெற்றன. 491 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். இவர்களில் இரண்டு யூனியன் மந்திரிகளும் ஐந்து உதவிமந்திரிகளும் இருந்தனர். மகராஷ்டிராவில் 17 லோக்சபை ஸ்தானங்களுக்கும் 120 ராஜ்ய சட்டசபை ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. மைசூரில் பதினேந்து சுலோகசபை ஸ்தானங்களுக்கும் 119 ராஜ்ய சட்டசபை ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. மணிப்பூரில் இரண்டு லோகசபை ஸ்தானங்களுக்கும் இருபத்தெட்டு சட்டசபை ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது.

5 கோடி 75 லட்சம் பேர் வாக்களிப்பு

இன்று எட்டு ராஜ்யங்களிலும் மற்றும் மணிப்பூரிலும் நடைபெற்ற தேர்தல்களில் ஐந்து கோடியே எழுபத்தைந்து லட்சம்பேர் வாக்களிப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டது. இத்தொகை, இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களின் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியாகும். இன்று 69 லோகசபை ஸ்தானங்களுக்கும் 752 சட்டசபை ஸ்தானகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. வாக்களிப்பு காலை எட்டு மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை நடைபெற்றது. இன்று 60,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவு இடம்பெற்றது. தமிழ்நாட்டில் ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு சுமார் 900 வாக்காளர்கள் என்ற அடிப்படையில் வாக்குகள் பதிவாகின.

'தாயகத்தை மறந்துவிட்டார்'

உலக அழகிபற்றி இந்திய பிரமுகர்

புதுடில்லி, பெப். 14

ரீட்டோ பரீய உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே, தனது தாய்நாட்டையும், பெற்றோரையும் மறந்துவிட்டார் என்று பிரிட்டனில் முன்னர் இந்திய தூதராக இருந்த டாக்டர் ஜே. மேதா இன்று இங்கு கூறினர்.

உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டபின்னர் அவர் தம் பெற்றோரைப் பார்க்கவே வரவில்லை. ஒருவேளை அவருக்கு வெளிநாட்டில் வாழ்க்கை வசதியும் வாய்ப்பும் நிறைந்ததாய் இருக்கலாம் என்று அவர்குறிப்பிட்டார்.

பிரிட்டனில் பயிலும் இலங்கை அதிகாரி

லண்டன், பெப். 15

இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகப் பயிற்சிப் பிரிவு அதிபரான திரு. ஷெல்டன் வனசிங்கா மூன்று வார விஜயத்தை மேற்கொண்டு பிரிட்டன் சென்றிருக்கிறார். பிரிட்டனில், பிரிட்டிஷ் நிர்வாகப் பயிற்சி முறைகளை அவர் படித்தறிவார். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காரியாலயத்தின் விருந்தினராகவே அவர் பிரிட்டன் சென்றிருக்கிறார்.

திரு. வனசிங்கா கடந்த 5-ம் திகதி லண்டன் வந்து சேர்ந்தார். சென்ற வாரம் அவர் லண்டனிலுள்ளபிரிட்டிஷ் திறைசேரியின் கல்விப் பிரிவுக்கு விஜயம் செய்தார்.

இலங்கை வரும் விமானத் தளபதி

லண்டன், பெப். 15

தூரகிழக்கிலுள்ள பிரிட்டிஷ் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் சேர். ரொச்போர்ட் ஹியூக்ஸ் இன்று சிங்கப்பூரிலிருந்து விமானமூலம் கொழும்பு செல்கிறார்.

சேர் ஹியூக்ஸ் இலங்கையில் தங்கியிருக்கும்போது இலங்கை விமானப்படையின் தளபதி எயர் கமாண்டர் ரோகன் அமரசேகராவைச் சந்திப்பார். அவர் இரு தினங்களை மலேநாட்டில் கழிக்கவிருக்கிறார்.

விஞ்ஞானிகள் கண்டனம்

வாஷிங்டன், பெப். 15

வடக்கு வியட்னாமில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் காடுகளில் இரசாயன பொருள்களையும் வீசுவதைக் கண்டித்து 5000 விஞ்ஞானிகள் அமெரிக்க அதிபர் ஜோன்சனிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர். இவர்களில் 17 விஞ்ஞானிகள் நோபல்பரிசு பெற்றவர்கள்.

சீமெந்து தொழிற்சாலையில் உபஉணவுப் பயிர்கள்

அளவெட்டி, புதன் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையும் உபஉணவு பயிரிடுவதில் இறங்கியுள்ளது. அரசாங்கத்தின் உணவுக் கொள்கைக்கு ஆதரவு கொடுக்கும் நோக்கத்துடனேயே இந்த நல்ல காரியம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

சீமெந்துத் தொழிற்சாலை வளவில் தரிசு நிலமாகக் கிடந்த 250 பரப்புக்கும் அதிகமான நிலத்தைப் பண்படுத்தி உபஉணவுகளான வாழை, மரவள்ளி, பயறு, மற்றும் சிறு தானியங்கள் பயிரிடப்படுகிறது.

பயிரிடும் நிலத்தை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு ஐந்து பகுதிகளாகப் பிரித்து பயிரிடக் கொடுக்கப்பட்டது. சீமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்காகக் காணிகளைச் சுவீகரிக்குமுன் இந்த நிலத்தில் வெற்றிலை, வாழை, புகையிலை, குரக்கன், சாமி, வெண்காயம் முதலிய பயிர்கள் விசேடமாக பயிரிடப் பட்டிருந்தது.

'இருந்த நம்பிக்கையை ஹனோய் கெடுத்துவிட்டது'

கொஸிஜின் சந்திப்பின் பின் பிரிட்டிஷ் பிரதமர் தகவல்

லண்டன், பெப். 15

கடந்த வாரத்தில் வியட்னாம் நெருக்கடியைத் தீர்ப்பதில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் தெரிவித்துள்ளார். ஓர் எளிய சாதாரண நடவடிக்கையின் மூலம் அதனைச் சாதித்திருக்கலாம் என்றும் திரு. வில்சன் கூறியுள்ளார்.

நேற்று அளித்த டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் தான் பிரிட்டிஷ் பிரதமர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கடந்த வாரத்தில் வடக்கு வியட்னாம் சிறிது தாராளப் போக்கைக் கடைப்பிடித்திருந்தால் வியட்னாம் நெருக்கடியில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கும் என்றும் திரு. வில்சன் நம்பிக்கை தெரிவித்தார்.

"வியட்னாம் நெருக்கடியைத் தீர்ப்பதில் அமெரிக்காவுக்கு உண்மையான விருப்பம் இருக்கிறது. வடக்கு வியட்னாமுக்கும் இந்த நோக்கம் இருந்த பொழுதிலும் தென் வியட்னாமுக்குத் தனது இராணுவ நடவடிக்கைகளை அது விஸ்தரிக்க விரும்புகிறது. இதனால் பிரச்னை நீண்டுகொண்டு போகிறது" என்று பிரிட்டிஷ் பிரதமர் கூறினர்.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நேற்று பிரிட்டிஷ் பிரதமர் பேசுகையில், வடக்கு வியட்னாம் மீது அமெரிக்கா மீண்டும் குண்டு வீச்சை ஆரம்பித்திருப்பதை கண்டிக்க மறுத்து விட்டார்.

லாஸாவில் மூளும் கைகலப்புகள்

செங்காவலர் பலர் கொல்லப்பட்டனர்?

டாக்கியோ, பெப். 15

திபேத் தலைநகரமான லாஸாவில் மா—சே—துங் ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்குமிடையே கைகலப்புகள் மூண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கைகலப்பில் ஏராளமான செங்காவலர்கள் கொலை செய்யப்பட்டனர் என்றும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லாஸாவில் மா-சே-துங் எதிர்ப்பாளர்களின்கை ஓங்கிவருவதாக செய்திகள்கூறுகின்றன.

மா—சே—துங் ஆதரவாளர்களிடமிருந்து சில பகுதிகளை எதிர்ப்பாளர்கள்கைப்பற்றியுள்ளனர் என்றும் இதனையொட்டி நடைபெற்ற கைகலப்பில் 400 செங்காவலர்கள்கைது செய்யப்பட்டனர் என்றும் பலர் கொலைப்பட்டனர் என்றும் லாஸாவிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையே, தென்மத்திய சீன மாகாணமான கியான்ஸியில் மா-சே-துங் ஆதரவாளர்களிடையே பிளவு ஏற்பட்டு அவர்களில் ஒரு பகுதியினர் எதிர்ப்பாளர்களாகிவிட்டனர் என்று அங்குள்ளஜப்பானிய நிருபர்கள் அனுப்பியுள்ள செய்திகள் கூறுகின்றன.

இவர்களுக்கிடையே

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சென்னையிலிருந்து நமதுநிருபர் கா. யோகநாதன் எழுதுவது —

தி. மு. க. ஆட்சிக்குவந்தால் ம. பொ. சி., ஆதித்தனர் மந்திரிகளாவர்

ராஜாஜிக்கு இன்னும் காங்கிரஸில் செல்வாக்கு

சென்னை, பெப். 15

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்தால், தி.மு.க. தேர்தல் சின்னமான உதயசூரியன் சின்னத்துடன் போட்டியிடும் தமிழரசுக்கழகத் தலைவர் திரு.ம. பொ. சிவஞானமும், நாம் தமிழர் கட்சித்தலைவர் திரு.சி. பா. ஆதித்தனரும் கழகத்தில் சேர்ந்துவிடுவார்கள் என்றும் அவர்களிருவருக்கும் தி. மு. க. மந்திரிசபையில் பதவியளிக்கப் படுமென்றும் இங்கு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இது ராஜாஜி செய்த ஏற்பாடுகள் தானும்.

ராஜாஜி வெளியில் இருந்துகொண்டே பல வேலைகளைச் செய்து வருகிறார். தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியாளர் ஒன்றுபட்டால் காங்கிரஸ் தோற்கும் என்று அகில இந்திய காங்கிரஸ் பொருளாளர் சமீபத்தில் அறிக்கை வெளியிட்டிருந்தார். இதற்கும் ராஜாஜி தான் காரணமாம். ராஜாஜி சுதந்திரா கட்சித்தலைவராயிருந்தாலும், காங்கிரஸில் இப்போதும் அவருக்குச் செல்வாக்குண்டு. ராஜாஜி சொன்னதை சில காங்கிரஸ்காரர்கள் கேட்பார்கள். பிரதமர் பதவிக்கு காங்கிரஸிற்குள் இப்போது போட்டி நடக்கிறது. காங்கிரஸ் மத்திய சபையில் வெற்றிபெற்றால் இந்திராவுக்கு வேலை செய்யவேண்டுமென ராஜாஜியிடம் கேட்கப்பட்டதாகவும் அதற்கு அவர் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோற்கும் என்ற விதத்தில் ஒரு அறிக்கை விடவேண்டும் என்றும் கூறியதாகவும், அதன்காரணமாகவே காங்கிரஸ் பொருளாளர் இந்த அறிக்கையை விட்டதாகவும் கூறப்படுகிறது. இல்லாவிடில் இந்த தேர்தல் நேரத்தில் காங்கிரஸ்காரர்இப்படி அறிக்கை விடுவாரா? இந்திரா பிரதமராக இருப்பதில் ராஜாஜிக்கு கவலையில்லை. தமிழ்நாட்டில் காங்கிரஸை[குறிப்பாக காமராஜரை தோற்கடிக்கவேண்டு மென்பதுதான் ராஜாஜியின் விருப்பம்.

சம்பத்தும் பெரியாரும்

அண்ணாதுரையை விட்டுப் பிரிந்து சென்ற ஈ. வி. கே. சம்பத்திற்கு இப்பொழுது மக்களிடையே செல்வாக்குக் குறைந்துவிட்டது. சித்தாரிப்பேட்டையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் அவர் பேசவந்தார். அப்பொழுது வேறு ஒருவர் பேசிகொண்டிருந்தார். சம்பத் வந்ததைப்பற்றி கூட்டத்தில் யாரும் பொருட்படுத்தவில்லை. அவர் தி.மு.கவில் இருந்தபோது, தூரத்தில் வரும்போதே மக்கள் கரகோஷம் செய்வார்கள். அவருடைய பேச்சிற்குப் பெருமதி இருந்தது. ஆனல் இன்று சாதாரண மனிதராகிவிட்டார். 57ம் ஆண்டு இவர் தி. மு. க. சார்பில் டில்லி பாராளுமன்றத்திற்கு போட்டியிட்டு வெற்றி பெற்று டில்லியில் தி.மு. க. வின்குரலை எழுப்பினர். 62ல் தமிழ் தேசியக்கட்சித்தலைவராக தென் சென்னையில், தி. மு. க. வை சேர்ந்த நாஞ்சில் மனேகரனுடன் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்தார். அதன் பின் காங்கிரஸிற்காக உழைத்து வருகிறார். இவருக்கோ இவரின் நண்பன் கண்ணதாசனுக்கோ காங்கிரஸார் ஒரு தொகுதியையும் ஒதுக்கி விடவில்லை. இவர்கள் இருவரும் தி. மு. கவில் இன்று இருந்திருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார்களென்றும், காங்கிரஸ் நடுநடுங்கியிருக்குமென்றும், தி. மு. க. தொண்டர் ஒருவர் என்னிடம் கூறினர்.

ஈ. வே. கி. சம்பத் திராவிடகழக தலைவர் பெரியார் ராமசாமியின் சகோதரரின் மகனயிருப்பதால், அவர் இறந்தபின் திராவிட கழக தலைவராக வரக் கூடும். பெரியாருக்கு குழந்தைகள் இல்லை. அதனல் லட்சக் கணக்கான பெரியாரின் சொத்துக்கள் சம்பத்தை சேரும். சம்பத்தான் அவரின் ஒரே வாரிசு. இதற்காகத்தான் சம்பத், பெரியாரின் வழியைப் பின்பற்றி காங்கிரஸை ஆதரிப்பதாக தி. மு. கவினர் கூறுகின்றனர். திராவிடக் கழகத்தின் பெயரிலும் ஏராளமான சொத்தை பெரியார் எழுதி வைத்திருப்பதால் சம்பத், பெரியாருக்குப் பின் திராவிட கழக தலைவராகலாம் என்றும் கூறுகின்றனர். தி. மு. கவில் இருக்கும் போது இருந்த செல்வாக்கு இப்போது சம்பத்திற்கு இல்லை. இனி எப்படியோ?

பெர்னுட்சொய்ஸா

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு தெற்கு எம்.பி. திரு. பெர்னுட் சொய்ஸா 16-ம் திகதி சுன்னுகத்தில் சொற்பொழிவாற்றுவார். யாழ்ப்பாணத்தில் இவர் 17-ம் திகதி சொற்பொழிவாற்றவிருந்தார், இதுரத்துச் செய்யப்பட்டுள்ளது.

லாஸாவில் . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் மா-ஸே-துங் ஆதரவாளர்களைபோலி புரட்சிக்காரர்கள் என்று மா-ஸே-துங் எதிர்ப்பாளர்கள் கூறி வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு இடத்தில் இராணுவச்சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை

பலாலி, புதன்

வடபகுதி மீனவர்களுக்கு மீன்பிடி கூட்டுஸ்தாபனத் தலைவர் எச்சரிக்கைச் சுற்று நிருபமொன்றை அனுப்பியிருக்கிருர்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நான்குவடபகுதி மீண்பிடிக் காரியாலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில், இப்பகுதிகளிலுள்ள பீன்பிடிப்படகுகள், கட்டுமரங்களைக் கணக்கிட்டு இதற்கான வரியைச்செலுத்தாதவர்கள்மீது வழக்குத் தொடருமாறு கோரியுள்ளார். பலர் நான்கு ஐந்து வருடங்களாக வரி செலுத்தாததையிட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தண்டனையை எதிர்த்து அப்பீல்

மாவிட்டபுரம், புதன்

கீரிமலையைச் சேர்ந்த விஞசி செல்வராசா என்பவர் சென்றவருடம் பெப்ரவரி மாதம் 4-ம் திகதி பன்னலையைச் சேர்ந்த குஞ்சர் சங்கரியைவாளால்வெட்டிப் படுகாயம் ஏற்படுத்தியதாகவும், அவருக்குப் பன்னலையைச் சேர்ந்தவர்களான வயிரவிகந்தையா, கந்தையா துரைசிங்கம் ஆகியோர் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முதல் இரு எதிரிகளையும் தலா ஒவ்வொரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும், அத்துடன் தலா நூறுரூபாய்அபராதம் செலுத்தும் படியும், அபராத செலுத்தாவிட்டால் மேலும் மூன்று மாதகாலம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் படியும் மூன்ரும் எதிரியை இருபத்திஐந்து ரூபாய் அபராதம் செலுத்தும் படியும் உத்தரவிட்டார்.

முதல் இரு எதிரிகளும் தண்டனையை எதிர்த்து அப்பீல் மனுத்தாக்கல் செய்ததைத் தொடர்ந்து நீதிபதி இரு எதிரிகளையும் தலா ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளார்.

தமிழ்காங்கிரஸ் செயற்குழுகூட்டம்

ஜி.ஜி. இன்று வருவார்

யாழ்ப்பாணம், வியா.

தமிழ்காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இம்மாதம் 18-ந் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி கட்சித் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு தமிழ்காங்கிரஸ் கட்சித்தலைவரும் யாழ்ப்பாணம் எம்.பி.புமான திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் இன்று இங்கு வருகிருர். இக்கூட்டத்தில் விசேஷமாக இலங்கை இந்தியர் மசோதா பற்றி ஆராயப்படவிருக்கின்றது. திருவாளர்கள் மு. சிவசிதம்பரம் எம்.பி., தா.சிவசிதம்பரம் எம். பி. ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் (ந.நி.)

சிந்திவிட்ட

சூப்பர் குயிங்

ரேயல் புளூ வாஷபிளையிட்டுத் துக்கிக்காதீர்! கழுவி விடலாம்!

உங்கள் பேனவை எந்நேரமும் துப்புரவாக வைத்திருப்பதற்கு அவசியமான சொல்வ் - எக்ஸ் கொண்டது. சூப்பர் குயிங்கிலேட்டுமே இது உண்டு. நிரந்தரமான எழுத்துக்கு மங்காத நீலம், கரு நீலம், டர்குயிஸ், சிவப்பு, பச்சை அல்லது கறுப்பைத் தேர்ந்தெடுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
மகாராஜா கட்டிடம்
பாங்ஷால் வீதி, கொழும்பு.

பாக்கர் பென் கம்பனியின் ஒரு தயாரிப்பு.

செவண் சீஸ்

அவனுக்கு மேலதிக சக்தியும் வலுவும் அளிப்பது அதுவே...

சக்தி நிறைந்த போஷாக்கு எண்ணெயில் விட்டமின் ஏ. டி. ஆகியன கொண்டதே செவண் சீஸ். இதிலே பொலியுன் சச்சுரேட்ஸ் என்னும் ஆதாரப் பொருள் அபரிமிதமாக அடங்கப்பெற்றிருக்கிறது. ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும், இளைஞர், முதியோர் ஒவ்வொருவரும் சுக பலத்துடன் வாழ ஒத்தாசை செய்யவும் உகந்த பொருள் என டாக்டர்கள் கொட் லிவர் ஒயில் என்னும் மீன் எண்ணெயை சிபார்சு செய்கிருர்கள்.



உற்சாகமும் ... போதிலேயே அடைக ... வேண்டுமென்று ...

விற்று முடிப்பதற்காக!

இந்தியன் டபேட்டா

அழகிய நீலம், இளம் மஞ்சள், பிரௌன், கறுப்பு நிறங்களில்.

வ. விலை ரூபா 4 04
விற்று முடிப்பதற்காக ரூபா 2.

டயரம்ஸ்

54, பெரிய தெரு யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னுகம் பட்டணசபை அறிவித்தல்

சந்தையில் புதிய பஸ்நிலையம் அமைத்தல்

1967-ம் ஆண்டு மாசி மாதம் 25-ம் திகதி காலை 10-00 மணிக்கு முன், இரும்புத் தொழில் வேலையில் அனுபவம் வாய்ந்தவரும், இரும்பு வேலை தொழிற் சாலை நடத்துபவருமாகிய கொந்தராத்துக்காரரிடமிருந்து சுன்னுகம் சந்தையில் புதிய பஸ் நிலையத்தில் அமைப்பதற்கு சீல் வைத்த கேள்விகள் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும். மாதிரிப் படத்தை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

24-2-67-ம் திகதி பி. ப. 2-30 மணிவரை வைப்புப் பணமாக ரூபா 100/-ம், பத்திரப் பணமாக ரூபா 5/-ம் செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்காகக் கட்டும் ரூபா 5 -ம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் யாவும் சுன்னுகம் பட்டண சபைக் காரியாலயத்தில், கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டணசபை,
சுன்னுகம்,

பட்டணசபை
அலுவலகம்,
சுன்னுகம்,
13-2-1967. 2440

சைக்கிள் திருடினராம பிணையில் அனுமதி

சாவகச்சேரி, செவ். சாவகச்சேரியைச் சேர்ந்த மயில்வாகனம்சின்னத்துரை என்பவரது சைக்கிள் களவு போனது சம்பந்தமாகச் சந்தேகத்தின் மீது சாவகச்சேரிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் 1-ம் திகதி முதல்இருந்த வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணன், பொன்னையா சதாசிவம், அப்துல்காதர் சாகுல் கமீர் மற்றும் 11-வயதுச் சிறுவன் ஒருவனுட்பட நால்வரும் இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமாமுன்நிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர். மாஜிஸ்திரேட் சந்தேகநபர்கள் நால்வரையும் தலா ரூபா 500பிணையில் செல்ல அனுமதித்தார்.

வாலிபர் நிகழ்ச்சிகள் கொழும்பு

வியாழன் 15-2-67

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15தமிழோடிசை பாடல், 6-30 சிறுகதை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி.

லொறி விபத்தில் சிறுவன்

உடுப்பிட்டி, புதன் நேற்று முன்தினமிரவு புருப்பொறுக்கி என்னுமிடத்தில்லொறியொன்றினால் மோதுண்ட சுந்தரம் அரசரத்தினம் என்னும் 16 வயதுச் சிறுவனொருவன் காயங்களுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பிரஸ்தாப லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், லொறி பருத்தித்துறை பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளதாகவும் அறியப்படுகிறது.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

வரகு:
60 புசல் வரகு விற்பனைக்குண்டு. விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1528

காணி ஆதனங்கள்
இருபாலையிலும் கல்குடாவிலும் காணி ஆதனங்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. விசாரணைகளை ஆங்கிலத்தில் உடனடியாக கீழ்க்காணும்விலாசத்துடன்வைத்துக்கொள்ளவும். சோமாதேவி பிளேஸ், கிரிலப்பனை, கொழும்பு-5. 1524

பயிற்சி

மேசன் பயிற்சி
மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். வகுப்புகள் மேசன் பயிற்சி, கட்டிடங்களுக்குப் படங்கள் போடும் பயிற்சி [Draughtsman Course] இவை ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்பித்துக்கொடுக்கப்படும். விபரங்கள் நேரில் 213, செல்லம்ஸ் சீமென்ற் வோக்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 1540

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தேவை

மனேச்சர்...
எங்கள் அலுவலகத்திற்கு மனேஜர், காசாளர், லிகிதர் தேவை. சகல விபரங்களுடனும் 25-2-67-க்கு முன் மனுச்செய்யவும். செயலாளர், 308/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 2346

பட்டதாரி
கணேசன் கல்விநிலையம் அளவெட்டியில் கல்வி கற்பிக்க B. Sc. பட்டதாரி ஒருவர் தேவை. இருபாலாரும் 25-2-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். 1541

ஆசிரியர்
கணேசன் கல்வி நிலையம் அளவெட்டியில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புத்தக வைப்பு முறை [ஆங்கிலம்] கற்பிக்க ஆசிரியர் தேவை. 25-2-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். 1542

ஆசிரியை
கணேசன் கல்விநிலையம் அளவெட்டியில் தையல் கலை கற்பிக்க தராதரப்பத்திரமுள்ள ஓர் ஆசிரியை தேவை. 25-2-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். 1543

ஆயுள்வேதவைத்தியர்
கொழும்பிலுள்ளவர்த்தக நிலையம் ஒன்றில் முழு நேரம் அல்லது பகுதி நேரம் வேலை செய்வதற்கு ஒரு ஆயுள் வேத வைத்தியர் தேவை. தராதரம்— கொழும்பு, ஆயுள்வேத கல்லூரியிடமிருந்தும் பிரசித்திபெற்ற கோயில்களிலிருந்தும் ஆயுள் வேத வைத்தியர் என்ற நற்சாட்சிப் பத்திரம். சம்பளம்—அரசாங்கவிகிதத்தின் படி. விளம்பரஇல. 1533, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும. 1533

கல்வி

வகுப்புகள்
வர்த்தகம், விஞ்ஞானம், கலை, சிங்களம், தையல் வகுப்புகள் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். விடுதி வசதி அளிக்கப்படும். பெண் பாடசாலை, வர்தகக் கல்லூரி, [ஸ்தாபிதம்:1924] நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை, 2344

வகுப்புகள்
J. S. C., G. C. E. படிக்கும் பிள்ளைகளுக்கு வீட்டில் வந்து அனுபவமுள்ள ஆசிரியர்களால் எல்லா விஞ்ஞானப்பாடங்களும் கற்பிப்பதற்குத் தொடர்புகொள்ளவும். M. பொன்னுத்துரை, கோட் வீதி, மல்லாகம். 2345

உதைபந்தாட்டம்

கிறீன்பீல்ட் வெற்றி

யாழ்ப்பாணம், வியா. பாஷையூர் சென். அந்தெனிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கிறீன்பீல்ட் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல்ட் வெற்றியீட்டியது. இப் போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் இரு கோஷ்டியினரும் பெரும் மோதலிலேயே ஈடுபட்டனர். எனினும் கிறீன்பீல்ட் கோஷ்டியின் அருமையான 'பாசிங்' எதிர் கோஷ்டியினரைத் திண்டாட வைத்தது. இடைவேளைக்கு முன் நடந்த போட்டியில் கிறீன்பீல்ட் இரு கோல்களும் பாஷையூர் ஒரு கோலும் பெற்றன. இவற்றை முறையே தம்பிராசா, இராசுவும், பாஷையூருக்கு ஸ்பீரியலும் அடித்துக் கொடுத்தனர். கிறீன்பீல்ட் கோஷ்டியில் இடதுகரை வீரரான தேவராசாவின் ஆட்டம்

[6-ம் பக்கம் பார்க்க]

கூப்பன் இல்லை
பிறின்ரட் சில்க்
வழக்கமான விலை 4-50 : மலிவு விலை 2-60
புதிய மோஸ்தரில்
இந்தியன் பிறின்ரட் வொயில் சாரிகள்
18-90
பிறின்ரட் டெக்றேன் சாரிகள்
24-00
கைத்தறி சாரிகள்
வழக்கமான விலை 27-00 : மலிவு விலை 21-00
பொகுமால்ஸ்
49, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
நவா
கொம்பனித்தெரு
கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | வெலிங்டன் யாழ்ப்பாணம்
விஜயா மட்டக்களப்பு | ஸ்ரீ கிருஷ்ணா திருமலை | விஜிதா ஹட்டன்
அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்! கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!! அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்

5-வது வாரம்
கெப்பிட்டல் கொழும்பு | மொடேர்ன் பண்டாரவளை
எம். ஜி. ஆர்., ரத்னா,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தொழிலாளி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
GERMAN FILM FESTIVAL
10-30 a. m.
OH MY PAPA
4-45 p. m.
EL HAKIM
7 00 p. m.
THE LIAR
9 45 p.m.
DREAMING LIPS

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி- வைஜயந்திமாலா
வஞ்சிக்கோட்டை வாலிபன்
[புத்தம்புதிய கொப்பி]

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
The Devil-Ship Pirates

REGAL - JAFFNA
NOW SHOWING
Charlton Heston
Richard Boone
in
THE WAR LORD

ஆடவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!
விற்று முடிப்பதற்காக
கொள்விலையிலும் பார்க்கக்
குறைக்கப்பட்டுள்ளது!

	வ. வி	வி.வி.
''டிப்ளோமாட்'' அம்பாசிடர் புஸ்சேட்	12-50	8-50
''டிப்ளோமாட்'' அம்பாசிடர் சேட்	12-50	8-50
''டிப்ளோமாட்'' லெசெர் சேட்	17-50	8-50
''ஹென்ட்லி'' கொமான்டோ சேட்	12-50	8-50

குறிப்பிட்ட இருப்பு மட்டுமே உண்டு!
டயறம்ஸ்
54, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனைவியை வெட்டியதாக புகார்செய்த கணவன் கைது

கத்தியொன்றை பொலிசார் கைப்பற்றினர்

மாவிட்டபுரம், செவ். சங்கானையைச் சேர்ந்த கிட்டினன் மனைவி சிவபாக்கியம் கத்திவெட்டுக் காயங்களுடன் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக இப் பெண்ணின் கணவர் வேலன் கிட்டினனும் இவரது நண்பர் எனக் கூறப்படும் நாகமுத்து கந்தசாமியும் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு நித்திரையின்போது தமது மனைவியை யாரோ கத்தியால் வெட்டியதாக வேலன் கிட்டினன் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணை நடத்தினர்.

வெட்டுக் காயங்களுடன் திருமதி சிவபாக்கியம் கிட்டினன் மூளாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இதற்கிடையேபொலிசார் நடத்திய விசாரணையில் வேலன் கிட்டினன், நாகமுத்து கந்தசாமியின் உதவியுடன் தமது மனைவியைக் கொலைசெய்ய முயன்றதாகத் தெரியவந்ததைத் தொடர்ந்து பொலிசார் இருவரையும் கைதுசெய்து இன்று பிற்பகல் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நிற்சிங்கா முன்னிலையில் ஆஜர் செய்தனர்சிவபாக்கியத்தை வெட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் கத்தியையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மாஜிஸ்திரேட் இரு நபர் சனையும் இம்மாதம் 25ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நாகமுத்து கந்தசாமி மாஜிஸ்திரேட்டிடம் தாம் ஒப்புதல் வாக்குமூலமளிக்கப்போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவரை மாஜிஸ்திரேட் பிஸ்கால் பாதுகாப்பில் வைக்குமாறு தெரிவித்து இரண்டு நாள் அவகாசமளித்து அதற்குப் பின்னர் தீர்க்கமான முடிவைத் தெரிவிக்குமாறு கூறினர்.

காயம் அடைந்தவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு.

"பேச்சில் பயனில்லை, செயல்தான் தேவை"

அரசாங்க அதிபர்களுக்கு மந்திரியின் குறிப்பு

கொழும்பு, செவ்

"பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. செயல்தான் இப்போது தேவைப்படுகிறது" என்று இன்று நடைபெற்ற அரசாங்கஅதிபர்களின் கூட்டமொன்றில் உணவு விவசாயமந்திரி திரு எம்.டி. பண்டா கூறினார்.

கூட்டுறவுச் சங்கக்கடைகள்மூலம் உணவு ரேஷன் கனிவிநியோகிப்பதில் உள்ள கஷ்டங்கள்பற்றி அரசாங்க அதிபர்கள்விளக்கியபோதே மந்திரி மேற்கண்டவாறுகூறினார்.

முன்பதாக ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தனபேசியபோது நாட்டில் இன்னும் ஆறுமாதங்களுக்குத்தேவையான பங்கீட்டு உணவுப்பொருட்கள் இருக்கின்றனவென்றும் எனவே இவை விநியோகிக்கப்படுவதில் தடங்கல்கள் ஏற்படாமல் இருப்பதில் கவனமாய் இருக்கும்படியும் அரசாங்க அதிபர்களைக்கேட்டுக்கொண்டார்.

பட்டதாரி மாணவர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம் செய்ய திட்டம்

கொழும்பு, செவ்

இலங்கையிலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களையும்சேர்ந்த பட்டதாரி மாணவர்கள் அனைவரும் அடுத்த வாரத்தில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யத்தீர்மானித்திருக்கின்றனர். இதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக மாணவர் செலவுக்கென பெறுகிய பணம் ஒதுக்கப்படாததைக் கண்டித்தும், பங்கிட்டுஅரிசியின் அளவுகுறைக்கப்பட்டதைக் கண்டித்தும் பட்டதாரிமாணவர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனராம்.

இவ்விரு விஷயங்களும்பல்கலைக்கழக நிர்வாகத்தைவிட அரசாங்கத்துடன் அதிகம் சம்பந்தப்பட்டிருப்பதால் இது அரசியல் வேலைநிறுத்தமாகவே இருக்குமென பல்கலைக்கழகவட்டாரங்கள் கருதுகின்றன.

ஆனைக்கோட்டை

யூனியன் கிளப் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

ஆனைக்கோட்டை யூனியன் கிளப்பினரின் 15-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த திரு. எம். பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற விநோத உடைப்போட்டியின் முடிவுகள்:-

1-ம்பரிசு: பொ.ஜெயபாலன் [விமானமும், விமான ஓட்டியும்] 2-ம் பரிசு சி. ஜேசுரத்தினம் [பைத்தியக்காரன்] 3-ம் பரிசு சி.அந்தோனிப்பிள்ளை [பொலிஸ் கான்ஸ்டபிள்] வெற்றி பெற்றவர்களுக்குகொழும்பு மாநகரசபை அங்கத்தவரான திரு. த நீதிராஜா ஜே.பி. பரிசில்களை வழங்கினார். [ந.நி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பனையுடன் லொறி மோதியது

சாவகச்சேரி, புதன்

கைதடி நுணாவிலில் ஏற்பட்ட ஒரு விபத்தில் லொறி பனையொன்றுடன் மோதியதால் பனையின் வட்டு முறிந்து விழுந்து விட்டது.

லொறியில் சென்ற எஸ். சரவணபவன், கே. நடராசா ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். சாவகச்சேரி பொலிசார் இதுபற்றி விசாரணை நடாத்துகின்றனர்.

சங்கானையில் கட்டாக்காலிகள்

சங்கானை, வியாழன்

சங்கானை பட்டினசபை எல்லைக்குள் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை ஒழிக்கும்படி பட்டினசபைத்தலைவரிடம் முறையிட்டதைத்தொடர்ந்து கட்டாக்காலி களைப் பிடிப்பதற்கு ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளன. பல கால்நடைகள் பிடிக்கப்பட்டுள்ளன. சிலகால் நடைகளை உரிமைகோரி குற்றப்பணத்தை பட்டினசபையில் செலுத்திப் பெற்றுக் கொண்டனர்.

கிறீன்பீல்ட் . . .

[5ம்-பக்கத் தொடர்ச்சி]

சிறப்பாகவிருந்தது. இவரது துரித ஆட்டமே கிறீன்பீல்ட் வெற்றிக்கு காரணமாக இருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் பாஷையூர் கோஷ்டிக்கு ஆர். மணியும், கிறீன்பீல்ட் கோஷ்டிக்கு மன்னவராசனும் மேலும் கோல்களை விளாசினர். பாஷையூர் கோஷ்டியின் கப்டன் மரியநாயகத்தின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. இப்போட்டி முடிவில் கிறீன்பீல்ட் கோஷ்டி 3—2 கோல்களால் பாஷையூர் கோஷ்டியை வெற்றியீட்டியது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

'லீக்' போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'லீக்' உதைபந்தாட்டப் போட்டி 17-ல் இருந்து 21-ம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மார்ச் மாத முற்பகுதியில் தென் இலங்கையில் இருந்து உதைபந்தாட்டக் கோஷ்டிகள் வடபகுதிக்கு விஜயம் செய்ய விருப்பதாலேயே இப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இக் கோஷ்டிகள் யாழ். தெரிவுக் கோஷ்டியுடன் போட்டியிடவிருக்கின்றன. இந்த இடைக்காலத்தில் யாழ். தெரிவுக் கோஷ்டி யாழ். விளையாட்டரங்கில் பயிற்சியில் ஈடுபடவிருக்கிறது. இலங்கை 'யுத்' உதைபந்தாடடக் கோஷ்டி, இராணுவ தெரிவுக் கோஷ்டி, புத்தளம் தெரிவுக் கோஷ்டி ஆகியன யாழ். கோஷ்டியுடன் மோதவிருக்கின்றன.

சென். ஹென்றீஸ் வென்றது

மீசாலை, புதன்

சென். ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஹென்றீஸ் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

திருக்கோணமலை கடிதம்

—நமது நிருபர்—

கிரமசேவகருக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சாங்க அதிபர்களிடம் தங்கியுள்ளதென்றும் தெரிவித்தார்.

"அரசியலிலும் தேர்தல்பிரசாரங்களிலும் கிராமசேவகர்கள் ஈடுபடுவதாக எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இக்குற்றச் செயல்களுக்காக அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மிகவும்குறைவாகவே இருக்கிறது. இதுபோன்ற பெரும்பிழைகளைச் செய்பவர்களுக்குஇடமாற்றம்தகுந்ததண்டனையாக இருக்க முடியாது. பிரதமர் தெரிவித்ததுபோல, அவர்களை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யவேண்டும். அண்மையில் கிராமசேவகர் ஒருவர் தேர்தல் பிரசார வேலையில் ஈடுபட்டுஒரு அபேட்சகரை பகிரங்கமாக ஆதரித்து மகிழ்ச்சி ஆரவாரமும் செய்திருக்கிறார். ஆனால் அவர்மீது குற்றங்கள் சுமத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டபின்னர் அவர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். இத்தண்டனை போதாது. அவர் உடனடியாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கத்துக்கு விரோதமான செயல்களில் இறங்கும் கிராமசேவகர்கள் மாவட்ட காரியாதிகாரிகள், பொலிஸ்அதிகாரிகள் ஆகியோரை விரைவாகக் கண்டுபிடித்து அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இதில் அரசாங்க அதிபர்கள் தீவிரகவனம் செலுத்தவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். புதிதாகக் கிராமசேவகர்களைத் திரட்டத் திட்டமிட்டுள்ளேன்" என டாக்டர் டபிள்யூ. தஹநாயகா கூறினார்.

திடீர் மரண

திருக்கோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் பிரதமகுமாஸ்தாவாகக் கடமையாற்றிய திரு. வி. பரமசிவம் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வழக்கம்போல படுக்கைக்குச் சென்றார் என்றும் நேற்று அதிகாலை திடீரென அவர் எழுந்து வாந்தி எடுத்ததாகவும் பின்னர் தமது கதிரையில் இருந்தபடியே இறந்துகிடக்கக் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

வர்த்தக சிப்பந்திகள் கூட்டம்

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பொதுச் சபைக் கூட்ட மொன்று கொழும்பில் உள்ள தாய்ச் சங்க காரியாலயத்தில் புதன் கிழமை நடைபெற்றது. வருடாந்த தூதுக் குழு மாநாடு, பங்கீட்டரிசிக் குறைப்பு அவசரகாலச் சட்ட நீடிப்பு, வேலைநிறுத்த அங்கீகாரம், போன்ற விஷயங்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இதனுடன் புதிய விதிகளும் கொண்டுவரப்படவிருக்கின்றன" என்று டாக்டர் டபிள்யூ. தஹநாயகா கூறினார்.

யானை மார்க்

கூடம்

யானைமார்க் கற்பூரம்
ELEPHANT BRAND
PUREST QUALITY
SPECIALLY MADE FOR INCENSE
ELEPHANT BRAND
REFINED CAMPHOR
UVA CAMPHOR INDUSTRIES CEYLON
REFINED CAMPHOR

இலங்கையிலேயே தயாரிக்கப்பட்டு, முதன் முறையாக இலங்கையிலேயே டின்களில் அடைக்கப்படும் உன்னதமான கற்பூர வில்லைகள். இறக்குமதியாகும் மற்றெந்தக் கற்பூர வில்லைகளுக்கோ, டின்களுக்கோ எந்த வகையிலும் சளைக்காத உயரிய தரச் சிறப்புடையவை.

ஒவ்வொரு 3/4 இருத்தல் டின்னிலும் 960 வில்லைகள்.

இது தவிர வேறு அளவான பக்கட்டுகளும் உண்டு.

எங்கும் கிடைக்கும்

கற்பூரம் வாங்கும் போது

யானை மார்க் டின் கூடம்

என்று கேட்டு வாங்குங்கள்.

வர்த்தக விசாரணைகளுக்கு:

எம். மாணிக்கவாசகம் அன்ட் கம்பெனி

106 2/1 றெக்கிளமேசன் றோட்டு, கொழும்பு 11.

தயாரிப்பாளர்கள்:

ஊவா கற்பூரத் தொழிற்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org